காளிதாசன் உவமைகள்

த. கோவேந்தன்

அநுராகம்
19 கண்ணதாசன் சாலை
தியாகராயநகர்
சென்னை-600 017.

☐ **KALIDASAN VUVAMAIKAL** ☐ By T. KOVENDAN
☐ First Edition 2002 ☐ Published by : ANURAGAM
19 Kannadhasan Salai T.Nagar Chennai - 600 017.
☐ Printed at Sakthi Printers Chennai - 600 017

Rs. 7-00

804

காவிய உலகில் மகாகவி காளிதாசனின் கற்பனை நயம் உலகோரால் வியந்து பாராட்டப்படுகிறது. காவியங்களில் காளிதாசன் கையாண்ட உவமை நயங்கள் இநத நூலில் விளக்கப்பட்டுளளது.

அநுராகம்.

காளிதாசன் உவமைகள்

1. அரசன் அறம்

கதிரவன் தேரில் குதிரைகளைப் பூட்டுவது ஒரு முறை தான் பூட்டியபின் குதிரைகளுக்கு விடுதலையும் இல்லை, ஓய்வும் இல்லை.

காற்று: இரவும் பகலும் இயங்குகிறது அதனின் இயக்கம் எப்போதேனும் நிற்கிறதா? காற்று வீசுவதில் வேறுபாடு காண்ப தில்லை. யாவருக்கும் ஒரேவகையில் வீசுகிறது

ஆதிசேடன் தான் ஏற்ற நிலச்சுமையை எப்போதும் சுமந்து கொண்டே இருக்கிறான். அதை எங்கே வைப்பான்?

ஆறில் ஒரு பங்குப் பொருளை வரியாகப் பெறும் அரசனுடைய அறமும் அவ்வாறே அரசினை ஏற்றபின் அவன் கடமையில் சோர்வதில்லை; கைவிடுவதில்லை அனைவருக்கும் ஒப்பப் பயன்படுகிறான் அவன் உள்ளவரை உலகத்தைக் காப்பதற்குத் தன் கடமையைச் செய்கிறான். சா. 5:1

ஞாயிறு தன் ஆயிரம் கதிர்களால் பல இடங்களிலிருந்து நீரை கொள்கிறான் நீரை எடுக்கையில் நீர்நிலைக்கு ஊறு செய்வதில்லை எடுத்த நீரை தூய மழையாக, வாழ உலகில் பெய்கிறான் நாடு செழித்து வளம் பெறுகிறது

பெற்ற வரிகளிலிருந்து அரசனோ, எடுத்த நீரினின்று ஞாயிரோ, தனக்கென எள்ளளவும் பயன்கொள்வதில்லை

வரி கொண்ட இடமும், நீர் மொண்ட இடமும் மட்டும் அன்றி, எல்லா மக்களுமே ஒருசேரப் பயன் துய்க்கின்றனர் ர. 1:18

திங்களும் ஞாயிறும் மக்களுக்கு நன்மை செய்வன. இரவையும் பகலையும் தருவன. பயிர்கள் வளர உதவுவன. ஆயினும், திங்கள் தாமரைக்குப் பகை; திங்களைக் கண்டால் தாமரை கூம்பும். அஃதேபோல் ஞாயிறு ஆம்பலுக்குப் பகை.

உயர்ந்த பண்புகள் எல்லோராலுமே போற்றப்படும் எனக்கூற இயலாது. ஆனால், அதிதி மன்னனின் குணங்களோ மாற்றார் மனத்திலும் இடம் கொண்டன. பகைவரும் அவனுடைய நற்பண்புகளைக் கொண்டாடினர். *ர. 17:75*

செங்கதிர் ஒளியால் இருள் அகல்கிறது; மக்கள் தத்தம் தொழிலைச் செய்யவும், நெறியை அறியவும் ஒளி உதவுகிறது. ஆனால் ஞாயிறோ மக்களை 'இன்ன செய்' என்றோ, 'இவ் வழியில் போ' என்று ஆணை இடுவதில்லை.

அரசன் மக்களுக்கு அறிவு புகட்டினான்; அவர்களிடம் உண்மையையே சொன்னான். அவர்களுடைய அக இருள் அகன்றது; பாவங்கள் அழிந்தன. அரசனது ஒழுக்கத்தை மக்கள் அனைவரும் கண்டனர்; அதைப் பின்பற்றி உயர்ந்தனர். *ர. 17:74*

வேனிற் காலத்தில் மாமரம் பூக்கிறது. பூ மணம் உடையது; காமன் அம்புகளில் ஒன்றாகும். பின்னர் பூ மறைந்து பிஞ்சு தோன்றுகிறது. காயாகிப் பழமாகிறது, மணம், சுவை கொள் கிறது. பழம் வந்தபிறகு எவரே பூவைப்பற்றி எண்ணுவர்? பூவே பழம் ஆயிற்று என்று கூட எண்ணுவதில்லை.

இரகு திலீபனிடமிருந்து தோன்றியவனே; எனினும், இரகு என்னும் பழம் கிடைத்ததும், அவனுடைய உயர்ந்த பண்பு களால், தந்தை திலீபனாகிய பூவை அந்நாட்டு மக்கள் மறந்து விட்டனர். *ர. 4:9*

பழங்கள் நிறைந்த மரம் வளைந்து வணங்கி நிற்கிறது. நீர்நிரம்பிய முகில் விண்ணில் தாழ்ந்து வருகிறது. ஓரிடத்தி லேயே இருக்கும் தாவரம் மரம்; பல இடங்களில் விருப்பப்படி திரியும் பொருள் முகில் இரண்டும் தம்மிடமிருந்து உதவி பெறுவோருக்குத் தாழ்ந்து எளிதாகின்றன நல்லோருக்குச் செல்வம் கிடைத்தால் அவரது பெருமை பணிவால் வெளிப் படும்; பணிவே பெருமைக்கு அணிகலன்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் மரம் தன் நலத்தைக் கருதுவதில்லை. தன்னை அண்டினோருடைய நலத்திற்காகத் தான் துன்பத்தை ஏற்கிறது. கோடையின் வெப்பத்தைத் தலையில் தாங்கித் தன் நிழலைத்தன் அடியில் இருப்பவர்களுக்குத் தருகிறது.

அரசனும் தன் இன்பத்தைக் கருதாமல் தன் நிழலில் வாழும் மக்களின் துன்பத்தைத் தலையில் ஏற்றுக்கொள்கிறான். *சா. 5:7*

மேகங்கள் கடல் நீரை மொண்டு செல்கின்றன. பல திசைகளிலும் சென்று மழையாகப் பொழிகின்றன. ஆதலால் முகில் வள்ளல்கள் எனப் புகழ்கின்றனர். ஆனால் முகில்களை வள்ளலாக்கியது கடல் என்பதை எவரேனும் நினைக்கிறார்களா?

அதிதி என்ற அரசனைப் பல வறிஞரும் புலவரும் அடைந்தனர். அவனின் கொடையால் தாம் பெற்ற பொருள்களைத் தம் ஊருக்குத் திரும்பியபின், பிறருக்கு வரையாது தந்து, வள்ளல் தன்மையை அடைந்தனர். அவர்களிடம் பொருள் பெற்றோர் அப்பொருளுக்கு முதற் காரணர் அதிதியையே மறந்துவிட்டனர்.

ர. 17:7

உரிய காலம் வந்ததும் பாம்பு இயற்கையாகவே சட்டை உரிக்கிறது. அப்போது அதன் தோலே அதற்கு சுமையாகத் தோன்றும். சொரசொரப்புள்ள இடத்தில் நுழைந்து அச் சுமையை நீக்கிக்கொள்ளும். தோல் உரித்த பின் பாம்பு பளபளப்புடன் ஒளி தரும். உரித்த சட்டையை அது மறுபடியும் ஏற்காது.

இரகு வானப்பிரத்த வாழ்க்கைக்கு உரியகாலம் வந்ததும் தன் அரசைத் துறந்து காட்டுக்குச் செல்கிறான். அவன் மகன் எவ்வளவு வேண்டிக்கொண்டும் துறந்த அரசைத் திரும்ப ஏற்கவில்லை. வானப்பிரத்தத்தில் அவனுக்குப் புதிய அமைதியும் ஒளியும் உண்டாயின. *ர. 8:13*

வேம்பு, அரசு, ஆல் போன்ற மரங்கள் பொருத்தமான நிலம் பெற்று வேர் ஊன்றி வளர்ந்தபின் அவற்றை கிள்ளிக் களைய முடியாது; வெட்ட வெட்டத் தழைந்து கொண்டே இருக்கும்.

அரசன் பகைப்புலத்தை வென்று தன் அரசை அங்கு ஏற்படுத்துகிறான். அவன் மக்களின் அன்பையும் மதிப்பையும் ஆதரவையும் பெறு முன்பு அவனை எளிதில் வீழ்த்தலாம். ஆனால், மக்களுடைய மனத்தில் அவன் வேர் ஊன்றி நிலைத்த பின் அவனை அகற்றுதல் அரிது. மா. 1:18

நெற்பயிர் நல்ல விளைச்சலைத் தருவதற்கு, நாற்றுகளைப் பண்படுத்தப்பட்ட வயல்களில் நடுகிறோம். நாற்றுகளைப் பிடுங்கி நடுவதால் வளம் உயர்கிறது; குன்றுவது இல்லை. வளர்ந்த நெற் பயிரினிடையே தாமரைகள் மலர்கின்றன. செந் நெற்கதிர்கள் தாமரை மலரின்மீது தாழ்ந்து நெல்மணிகளைச் சொரிகின்றன.

நெல் விளைபுள்ள வங்க நாட்டு அரசர்கள் இரகுவை எதிர்த்தனர். அவர்களை இரகு வென்றான்; கங்கைக்கிளை நதிகளின் இடையில் வெற்றிக்கம்பம் நாட்டினான்; நாட்டைப் பண்படுத்தினான். அங்கு இருந்த அரசர்களை அவரவர் இடங் களிலிருந்து அகற்றி அவர்களுட் சிறந்தவரைத் தேர்ந்து எடுத்து, அவர்களுக்குப் பயிற்சி தந்து, முடிசூட்டி, அந்நாட்டிலேயே நிலைபெறச் செய்தான். அவர்களுடைய ஆளுகையில் நாடு வளம்பெற, அம் மன்னர்கள் தம் செல்வங்களை இரகுவின் அடி மலர்களில் காணிக்கையாக்கினர். ர. 4:37

காற்று விரைந்து வீசினால் மரங்கள் ஒடியும்; மிக மெல்ல வீசினால் அவற்றில் அசைவு இல்லாது புழுக்கம் தோன்றும். மென் காற்று மரங்களைச் சிறிதே வளைக்கும்.

அஜன் பிற அரசர்களிடம் மிகக் கடுமையாக நடந்து கொண்டு அவர்களைப் பதவியினின்று நீக்கவில்லை. மிக மென்மையாகப் பழகி அவர்கள் தன் ஆணைகளைப் புறக்கணிக் கவும் இல்லை. ஆனால் அனைவரும் தன் ஆணைக்கு வணங்கு மாறு செய்தான். ர. 8:9

அவன் இளைஞன்; இன்பங்களைத் துய்க்கும் பருவம், ஆற்றல், வாய்ப்பு பெற்றவன். அவன் மடியில் இளம் பெண் ஒருத்தி கிடக்கிறாள். ஆயினும் பல ஆண்டுகள் அவளைத் துய்க்காமல் 'கத்தி முனை' (அஸிதாரா) விரதம் மேற் கொள் கிறான். ஒருவன் இளம் பெண்ணுடன் ஒரே படுக்கையில்

இருந்தாலும் தம் நடுவே கத்தி வைத்து இருப்பது போல, புலன் அடக்கத்துடன் ஐம்பொறிகளையும் வெல்வது அந்த நோன்பு.

பரதனுக்கு அரசாட்சி தானாகவே வாய்த்தது. அவன் பெற்றது தனி அரசு. உட்பகை, புறப்பகை எனும் முட்கள் அற்றது. எனினும், இராமனிடம் உள்ள பக்தியால் அதனை நுகராமல் பதினான்கு ஆண்டுகள் ஆட்சியில் கடுமையான 'அஸிதாரா' விரதத்தை மேற்கொண்டான். *ர. 13:67*

தசரதன் பழைய ஆலமரம், பரசுராமன் என்னும் காட்டுத் தீயால், தசரதனுடைய ஆளுகையில் இருந்த பல மன்னர்கள் வீழ்ந்துபட்டனர். புதிதாகத் திருமணம் செய்துகொண்ட மக்களோடும் சுற்றத்தாரோடும் அயோத்திக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கும்போது, காட்டுத்தீபோல் பரசுராமன் அவனைப்பற்றினான். இராமன் எனும் பெருமழை அவனையும் எஞ்சியோரையும் அத்தீயினின்று காத்தது; இராமன் 'உருகு தாதையைப் பொழிந்த பேர் அன்பினால் தொழுது, முன்பு புக்கு இழிந்த வான் துயர்க் கடலினின்று ஏற்றினான்.' *ர. 11:92*

இட்வாகு குலம் என்ற கண்ணாடி உலகனைத்தையும் விளக்கும் கதிரவனிடமிருந்து உண்டானது. மேகமும் சூரியனால் உண்டானதே - வீசிய ஆவி அக் கண்ணாடியில் படிந்தது. கண்ணாடியின் எதிரொளி குறைந்தது. மக்கள் தம் ஒழுக்கத்தைக் காட்டும் கண்ணாடியைப் பார்த்தபோது அதில் இராமனிடம் உள்ள மாசு அவர்களுடைய கண்ணுக்குத் தென்பட்டது.

"துடைத்தால் அம்மாசு போய்விடும்; சற்று நேரம் வெய்யில் அடித்தாலும் அந்த மாசு அகலும்; ஆனால் அது வரை மாசு படிந்த கண்ணாடியாக இராமன் இருப்பது தகுமா?" இது இராமன் வாக்கு. *ர. 14:37*

நீரில் எண்ணெய் சிந்திவிட்டது; காற்றும் அடிக்கிறது; அலைகள் எழுகின்றன; அலைதோறும் எண்ணெய் பரவித் தோன்றுகிறது. அவ் எண்ணெயை நீரினின்று எடுக்க முடியாது; எடுக்க முயன்றால் அது மேலும் பரவும்.

சீதையைக் குறித்த பழிச்சொல் அயோத்தி நகரெங்கும் பரவியது, பரவிய பழிச்சொல்லைத் திரும்ப எடுக்க எவராலும் முடியாது.

"யான் இப் பழியைப் பொறுக்கவோ, மீட்கவோ வல்லேன் அல்லேன்" என்கிறான் இராமன் *ர. 14:38*

அன்று, நீல வானம் முழுதும் ஒளி பரப்பியது திங்கள் இன்றோ, தேய்பிறை நாள்தோறும் கலைகள் குறைந்து, பெரு விசும்பில் ஒரு மூலையில் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலையில் உள்ளது

அன்று, கரையைத் திரைக்கைகள் வருட நீர் நிறைந்திருந்தது குளம். இன்றோ, தொலைவில் சேறும் சிறிது பசுமையுமே எஞ்சி இருக்க, அக்குளம் கோடையில் வறண்டு கிடக்கிறது

அன்று, அகல் விளக்கு சுடர் விளங்கப் பொலிவு தந்தது இன்று, அது எண்ணெய் வற்றித்திரியினின்றும் சிறு பொறிகள் தெரிக்கும் நிலையில் உள்ளது

உலகம் முழுவதிலும் தன் கலைகளைப் பரப்பி ஒளிபெற விளங்கி, பல மக்களைத் தாங்கிய இரகு வம்சத்தின் இறுதிக் காலம் இது இன்று இரகு வசம் தன் உயிருக்கே ஊசலாடி உளைகிறது *ர. 19:51*

மலையின்மேல் ஏறுபவன் குனிந்து தடி ஊன்றி மெள்ள ஏறுகிறான்; மலையினின்று இறங்குபவனோ நிமிர்ந்து செல்கிறான் உயர்பவனுடைய இலக்கணம் பணிவு; தாழ்பவனுடைய இலக்கணம் இறுமாப்பு

பரசுராமன் விட்ணுவின் ஆறாம் அவதாரம்; தசரத ராமன் ஏழாம் அவதாரம் இருவரும் எதிர்ப்படும்போது, பரசுராமனுடைய வாழ்க்கை இருபத்தியொரு தலைமுறை அரசு களைகட்டு ஓய்ந்த நிலைமையிலும், தசரதராமனுடைய வாழ்க்கை சீதையை மணம் புரிந்து அவளுடன் அயோத்தி சென்று தன் பிறப்பின் பயனை அடையும் ஏறு நிலைமையிலும் இருந்தது இரு இராமரும் எதிர்த்ததற்கு பரசுராமனுடைய இறுமாப்பு அன்றி வேறு காரணம் இலது

வெற்றி கொண்ட தசரதராமன் பரசுராமனுடைய திருவடிகளைத் தன் தலையால் தொட்டு வணங்கினான் தோற்றவரிடம் பணிவுடன் நடந்துகொள்வதே வென்றவருக்குப் புகழ் தருவது

ர. 11:89

அனைவரும் பெற விரும்புவது திரு: கல்வி, குடிப்பிறப்பு, அரசு, செல்வம், அழகு, மன உறுதி, உடல் வலிமை, பொறை யாவுமே ஒன்று திரண்டது அத் திரு தாமரையில் இருப்பதாகக் கவிஞர் கூறுவர் பழைய பூவை விட்டுப் புதுமலரை நாடுவது அதன் இயல்பு

திலீபனைச் சிறிது காலம் திரு அடைந்திருந்தாள்; அவனிடம் தோன்றிய இரகுவுக்குப் பருவம் வந்ததும் அத்திரு பழைய மலரை நீக்கிப் புது மலரை அடைவதுபோல இரகுவை வந்து அடைந்தாள் *ர 3:36*

கவர்ச்சிப் பெண் ஒருத்தி தன் காமக்கலையால் கணவனைத் தன் வயப்படுத்துவதுபோல, வேட்டை தசரதனைத் தன் வயப் படுத்தியது இன்பம் துய்ப்பதால் காமவேட்கை வளர்வதுபோல், வேட்டைமீது உள்ள அளவு கடந்த ஆசையால் தசரதனுடைய வேட்டை வேட்கை வளர்ந்தது; குறையவில்லை அரசை அமைச்சரிடம் ஒப்புவித்து, அம் மன்னன் அவ் இன்பத்தில் திளைத்திருந்தான் *ர. 9.74*

பிருது ஓர் அரசன் அவன் நிலத்தை உழுது பயிரிட்டு உணவு பெருக்கி, மக்கள் எவரும் பசியால் வருந்தாமல் காத்தவருள் முதல்வன் நிலத்தை பசுவாகவும், இமயத்தைக் கன்றாகவும் மேருவைப் பால் கறப்பவன் ஆகவும் ஆக்கி, நிலமடந்தை முலை சுரப்ப, உலகில் உள்ளனவற்றைக் கறந்து, மக்களுக்கு அளித்தான் ஒளிரும் மணிகளும் மருந்துகளும் கிடைத்தன அவன் கறப்பதில் வல்லவன்

நிலத்திலிருந்து வெளிவந்தன வற்றுள் ஒருத்தி சீதை; இமயக் கன்று பசுவாகித் தந்த செல்வம் உமை இவர்களால் மனித குலம் உயர்ந்தது *கு. 1.2*

2. இயற்கை

இமயமலை எண்ணற்ற நவமணிகளின் குவியல்: சிறப்புப் பொருள்களுக்கும் உறைவிடம் ஆனால் அங்கு ஒரு குறை உண்டு; அது பனிக்குளிர் இந்த ஒரு குறை இமயத்தின் பெருமையைக் கெடுக்குமா?

முழு நிலா நீல வானிலிருந்து நம்மேல் தன் அமுதுக் கதிர்களைப் பொழிகிறான். அந்நிலவின் இன்பத்தில் நிலவில் உள்ள மறுவைப்பற்றி எவரேனும் நினைக்கிறார்களா? அதைக் காண்கிறார்களா? இல்லையே.

அதுபோல், நற்குணங்கள் நிறைந்து குவிந்த இடத்தில் ஒரு குறை இருந்தால் அது அக் குணத்திரளில் மறைந்து போகும்.

கு. 1:3

மழைக்கால முகில் இனிய, ஒலி ஒளியுடன் செல்கிறது. முகிலி மனைவியாகிய மின்னல் இணைந்து செல்கின்றது. மழை பொழிந்து மக்களையும், பயிர், செடி கொடி மரங்களையும், விலங்கு பறவைகளையும், மகிழ்வித்து அவை செல்கின்றன. மழை ஓய்ந்ததும் வானவில் தோன்றுகிறது.

திலீபனும் சுதட்சிணையும் இனிய ஒலியுடன் தேரில் காட்டுக்குப் போகும்போது பொருள்களை அள்ளி வீசி அனைவரையும் மகிழ்வித்துக் கொண்டு போனார்கள். அவர்கள் கடந்ததும், அவர்கள் ஏறிச் சென்ற வண்ணத்தேர் வானவில் போலக் காட்சி தந்தது. ர. 1:39

மழை, கடலிலும் நிலத்திலும் மலையிலும் பெய்கிறது; இடத்திற்கேற்பப் பயன் தருகிறது. கடலில் முத்துச்சிப்பி ஒன்று அங்காந்திருக்கிறது. அதில் மழைத்துளி விழுந்ததும் சிப்பி கருத் தரித்து, உரிய காலத்து ஒளிரும் முத்தை ஈனுகிறது.

ஆசிரியன், மாணவ மாணவியர் பலருக்குப் பல கலை களைக் கற்பிக்கிறான். பயில்வோருள் ஒரு மாணவன், மாணவி, கலையைத் தன்னிடத்துத் தாங்கி உரிய காலத்து வெளிப்படுத்து கின்றனர். அதனால் மாணவனோ, மாணவியோ, ஒளிர்கின்றனர். புகுந்த இடத்தின் பெருமையால் கலையும் உயர்கிறது. மா. 1:6

தேவர்கள் பயிர்கள்; இராவணனுடைய கொடுமை பயிர் களுக்கு உண்டான வறட்சி; திருமால், முகில், அவர் உதிர்த்த வாக்கு அமிழ்தம். பயிர் வறட்சியால் வாடியது; மழை பொழிந் தது; நீரால் வாட்டம் மறைந்தது.

தேவர்கள் இராவணனுடைய கொடுமையால் வாடினர். திருமாலின் திருவாக்கால் அவர்களுடைய வாட்டம் மறைந்தது.

ர. 10:48

மறைந்திருந்த தசரதன் ஒலியைக் கொண்டே நீருண்ண வந்த யானை எனத் தவறாகக் கருதி சிரவண குமாரனை அம்பு எய்து கொன்று விட்டான். குமாரனுடைய தந்தையிடம் சாபம் பெற்றான். இதை வேறு எவரும் அறிகிலர்.

கடலுக்கு அடியில் வடவை என்ற ஊழித்தீ உள்ளது. பல ஆறுகளின் நீர் கணந்தோறும் கடலிற் பாய்ந்து கொண்டிருந்தாலும், அந் நீரால் கடல் பொங்காமல் காப்பது அத் தீ. அத் தீ பரவாமல் காப்பது கடல் நீர் ஆயினும், ஊழிக்காலத்தில் அத் தீ பரவி, கடலையும் உலகையும் அழிப்பது உறுதி. தசரதன் மனத்தில் பாய்ந்த சாபம் யாரும் கண்டு அறியாத தீயாய் நின்றது. அவன் தண்மையும், பரப்பும், ஆழமும் உடைய கடலாக, அத் தீயைத் தாங்கும் ஆற்றல் படைத்திருந்தான். ஆனால், அக் கடல் ஒரு காலத்தில் வற்றப்போகிறது; சாபத்தீ ஓங்கப் போகிறது; இவன் அழியப்போகிறான். *ர. 9:82*

தன்னால் நிராகரிக்கப்பட்ட காதலியாகிய சகுந்தலையை எண்ணி வேறு எத்தொழிலிலும் ஈடுபடாமல், பித்தனைப் போன்று துஷ்யந்தன் இருந்தான். தேவர் தலைவன் அவனை யுத்தத்தில் ஈடுபடுத்துவதற்காக மாதவியை அனுப்பித் தூண்டுகிறான்.

கிளறினால் தீ கொழுந்துவிட்டு எரியும்; அடித்தால் பாம்பு நிமிர்ந்து படம் எடுக்கும். கொழுந்தும் படமும் முறையே தீயிலும் பாம்பிலும் இயற்கையாக உள்ளனவே. எனினும், பிறர் தூண்டுவதால் இவை வெளிப்படுகின்றன. மனிதப் பண்புகளும் கிளர்ச்சியால் ஓங்குகின்றன. *சா. 6:31*

பருவத்திற்கேற்ப உருவும் திருவும் ஒருங்கே பெற்ற இந்துமதி மகவைப் பெற்றபின் இளமையின் முழுப்பொலிவுடன் பூங்காவில் அஜனுடன் இன்பத்தில் திளைத்திருந்த பொழுது அவள் மீது ஒரு மாலை விழுந்தது; மாலையுடன் அவளும் மயங்கி வீழ்ந்தாள்; இறந்தாள். அஜனும் இறந்து இந்துமதியின் மேல் வீழ்ந்தான்.

விளக்கு எரிந்துகொண்டிருக்கிறது; அது எண்ணெயுடனும் எரிகின்ற திரியுடனும் கவிழ்கிறது; ஒரு கணத்தே திரி அணைகிறது; கொட்டிய எண்ணெய் மட்டும் தனியே நிற்கிறது.

ர. 8:38

காட்டில் கோடையால் நிலம் வெந்து பிளந்திருக்கிறது. அதில் முதல் மழைத்துளிகள் வீழ்தலால் மண்ணின் மணத்துடன் கூடிய ஆவி எழும்புகிறது. அவ் ஆவி செங்காந்தள் முகையின் மேல் படுகிறது. பூ விரிகிறது.

இராமன் இக் காட்சியைச் சீதைக்குக் காட்டித் தம் திருமணத்தின் போது நிகழ்ந்ததை நினைவூட்டுகிறான். *ர. 13:25*

கட்புலன் ஒன்றே எனினும் ஒளியில் பொருள்களைக் காணும் கண் இருளில் காண்பதில்லை. இருளில் பொருள்களைக் காண கட்புலன் மட்டும் போதாது; விளக்கின் ஒளியும் வேண்டும். ஒருவன் இடையூறுகள் நீங்கிப் பயன் பெறுவதற்கு வேண்டிய கருவிகள் இருந்தாலும் துணையும் வேண்டும். நல்ல துணையைக் கொண்டே ஒருவன் இடையூறுகளைக் களைந்து தன் குறிக்கோளை அடைய முடியும். *மா. 1:19*

முகிலே அளகாபுரிப் பெண்கள் மின்னல் போன்ற உருவம் உடையவர்; வானவில் போன்ற அழகிய வண்ண ஆடைகளை அணிபவர்; அங்குச் சித்திரங்கள் நிறைந்த அரங்குகளில் முழங்கும் இடிபோன்ற முரசம் பாடலுக்கும் ஆடலுக்கும் இசைய அதிரும்; நீர் நிறைந்த வாவிகளும், விண்மீன்கள் போன்ற மணிகள் குவிந்து வானைத் தொடும் உயர்ந்த மாளிகைகளும் அங்கு உள; உனக்குப் பழக்கமான சூழ்நிலை அவ்விடத்தும் உண்டு; புதிதாக ஓரிடத்திற்குப் போகிறோம் என்ற எண்ணமே உனக்கு உண்டாகாது. *மே. 2:1*

கொண்டல் தென் நாட்டைக் கடந்து பனிமலையில் ஏறுகிறது; அங்கு மலைத் தொடரிலிருந்து தெளிந்த நீருடன் கங்கை இறங்குகிறது. ஏறும் கரு முகில் இறங்கும் நீருள் படிவது கரிய யானை ஆற்றுக்கு எதிரே தன் உடலின் பிற் பகுதியை நீட்டிப் படுத்துக் குளிப்பது போன்ற தோற்றத்தை அளிக்கிறது.

முகிலின் கருநிழல் கங்கையின் வெண்ணீரில் சற்றுத் தொடர்ந்து செல்வது யமுனையும் கங்கையும் வேறு இடத்தில் ஒன்று கூடுகின்றனவோ என வியக்கத் தகும் காட்சியை நினைவுக்குக் கொண்டு வருகிறது. *மே. 1:51*

சீதை கருவுற்றவள் முன் வனவாழ்வில் நுகர்ந்த காட்சிகளையும் வனத்தில் உள்ள அன்னப்பறவைகள், அன்போடிருந்த பெண்கள், தவ வனங்கள் ஆகியவற்றைக் காண விரும்பினாள். தன் ஆசையை நிறைவேற்றுவதற்காகவே, இலக்குமணனுடன் தன்னைக் கங்கைக் கரைக்குக் கணவன் அனுப்புவதாக நினைத்துக்கொண்டிருந்தாள்; இராமனைக் கற்பகமாகவே கருதினாள். ஆனால், அவன் கத்தி போன்ற கூர்மையான இலைகள் உள்ள வாள் இலை மரமாக மாறியதை, பாவம் அவள் அறியவில்லை.

ர: 14:48

ஒரே நீர் நிலையில் தாமரை ஓரிடத்தும் ஆம்பல் மற்றொரு இடத்தும் உள்ளன. விடியற்காலையில் தாமரை மலர்கள் அலர, ஆம்பல் மலர்கள் கூம்புகின்றன.

இந்துமதியின் திருமண மண்டபத்தில் அஜனை அவள் மலையிட்டதால் முகம் மலர்ந்த கூட்டம் ஒன்று; ஏமாற்றத்தால் வாடிய அரசர் கூட்டம் மற்றொன்று. ஒன்றின் மலர்ச்சியில் மற்றதன் வாட்டம் இயற்கை. *ர.6:86*

உறுதியாகக் கட்டப்பட்ட பல மாடங்கள் கொண்ட அழகிய மாளிகை சிறந்த காவல் உடையது; அதன் மீது ஆல மரத்தின் சிறு விதை விழுந்து முளைத்துவிட்டது. என்ன முயன்றாலும் அவ் விதையில் தோன்றிய மரம் அம் மாளிகையை அழித்தே தீரும். விதை சிறிது; ஆனால் அழிவோ பெரிது. *ர. 8:90*

நாள் ஒளி வீசிய வெய்யோன் செக்கர் வானில் கறை படிந்த கைகளுடன் மறையும் போது, கீழ்த் திசையில் குளிர்மதி எழுகிறது. சற்று நேரத்தில் அம் மதியின் அமுதக் கதிர்கள் தன் ஒளியைப் பரப்பி மக்கள் மனத்தை மகிழ்வித்து, பயிர்கள், மூலிகைகள் வளர உதவும்; மேல் திசையில் உள்ள இரத்தக் கறையும் நீங்கும். மதி ஞாயிற்றினின்று பெற்ற ஒளியே ஞாயிற்றால் உண்டான வெம்மையை நீக்க உதவுகிறது; வெப்பத்தால் வருந்திய மக்களை மகிழ்விக்கிறது.

பரசுராமனின் வீழ்ச்சியும் தசரத இராமனின் எழுச்சியும் ஒருங்கே நிகழ்ந்தன. *ர. 11:82*

விசுவாமித்திரன் சூரிய காந்தக்கல்; அவனிடம் படைக் கலங்கள் இருந்தன. எனினும், அவற்றை இயக்க அவனால் இயலாது. இராமன் சூரியக் கதிர்; படைக்கலங்களை அவனிடம் அருளியதால் அவை இராமன் ஏவின செய்து நின்றன; அறந் தலை நிறுத்தவும் அரக்கரை அழிக்கவும் ஆற்றல் பெற்றன. *ர. 11:21*

பனிக்காலத்தில் மங்கிய திங்கள் கீழ்வானத்திலும், மாலை யில் விழப்போகும் செங்கதிர் மேல் வானத்திலும் காணப்படு கின்றன. பனி மண்டலம் சூழ்ந்துள்ளது. சில மாங்களுக்கு முன்பு மழை ஓய்ந்து, வேனிற்காலத்தில் நீல நிறவானில் திகழ்ந்த முழு, மதியோ இது, என்ற ஐயம் எழுகிறது. இன்றோ செங்கதிர் மறை வுக்குப் பின்னரே மதியைச் செவ்வனே காணமுடியும்.

காமன் மனைவி ரதி, ஒளி குன்றி, தன் முகத்தைப் பிறருக்குக் காட்டவும் நாணி ஒடுங்கியுள்ளாள். சிவனுடைய சீற்றம் தணிந்து, அவள் தன் நாயகனுடன் சேரும் காலத்தை எதிர்பார்த்து நாள் களைக் கழிக்கிறாள். *கு. 4:46*

புட்பக விமானத்தில் சீதையுடன் இலங்கையிலிருந்து திரும்பும் இராமன் தூரத்தில் விமானம் வரும்போது; "அதோ சரயூ என் தாய்; என் தந்தையால் கைவிடப்பட்டாள்; துணை அற்றிருந்தாள்; இன்று, குளிர்ந்த காற்றுடன் கூடிய தன் அலை கள் என்னும் கைகளை நீட்டி என் தாய் என்னை அணைக்க விரும்புகிறாள்." எனச் சீதையிடம் கூறுகிறான். *ர. 13:63*

இராம இலக்குமணரைக்கண்ட அவர் தாய்மார்கள், கோசலையும் சுமித்ரையும், பதினான்கு ஆண்டுகள் அவர்களைப் பிரிந்ததால் உகுத்த சோகக் கண்ணீர் வெம்மையானது. இராம இலக்குமணரைக் கண்ட மகிழ்ச்சியால் உண்டான கண்ணீர் தண்மையானது. இமயத்திலிருந்து வந்த பனிநீர் வெந்நீரைத் தண்ணீர் ஆக மாற்றுவது போல, தாய்மாரின் ஆனந்தக் கண்ணீர் சோகக் கண்ணீரைக் குளிர்வித்தது. *ர. 14:3*

யமுனையும் கங்கையும் கலவாமல் தனித்தனி நீரோட்டங் களாகச் சிறிது தூரம் செல்கின்றன. பிறகு, ஒளிரும் நீல மணியும் முத்துச்சரமும் போலே, கலந்தும் கலவாமலும், கருநீர்த் துளிகளும் வெண் நீர்த் துளிகளும் தோன்றச் செல்கின்றன. பின்,

ஆங்காங்கு கருங்குவளை மலரும் வெண் தாமரையும் பின்னிக் கட்டப்பட்ட சரம் போலே பெருநீர்த்துளிகள் தோன்றுகின்றன.

ஓர் இடத்தில், பெரு நீர்த்துளிகள் நீர்த்தொகுதி கருநில அன்னங்களும் வெண்ணிற அன்னங்களும் தனித்தனிக் கூட்டங் களாக அமர்ந்தன போலவும், வேறோர் இடத்தில், காரகில் இலையாகிய தரையின் மேல் வெண் சந்தனக் கலவையால் தீற்றிய கோலம் போலவும் தோன்றுகிறது.

இனி, பிரிந்துள்ள யமுனை நீரும் கங்கை நீரும் சிறிது சிறிதாகக் கலக்கின்றன. கங்கையின் நீர் மேலும், யமுனையின் நீர் கீழும் பரவுவது இருள் குடிகொண்ட மரப் பொதும்பரின் இலைகளூடு நிலவு ஒளி உள் புகுவது போன்றுள்ளது. யமுனை யின் நீர் மேலும் கங்கையின் நீர் கீழும் பாயும் இடம் நீல வானில் வெண் மேகங்கள் பரவுவனபோலத் தோன்றுகிறது.

ஓரிடத்தில், கரும் பாம்பை அணிந்து வெண்பொடி பூசிய சிவபெருமானுடைய திருமேனி போலக் கருநீர்ச் சுழல்கள் வெண்நீர்த்திரளில் காணப்படுகின்றன.

கங்கையின் வெண் நீரினும், யமுனையின் கரு நீர் குறை வேனும் விரைவுடையது. நெடுந் தூரம் சென்ற பின் யமுனை கங்கையுடன் இரண்டறக் கலந்து தன் கருமைச் சிறப்பை இழக்கிறது. *ர. 1 51:57*

3. இலக்கியம்

முதலில் பாதையை வகுப்பவன் பல இன்னல்களைக் கடந்து முன்னேறுகிறான். அவனுக்குப் பின் செல்வோர் பாதையை விரிவு படுத்தவும். ஒழுங்குபடுத்தவும் முன் சென்ற வனுடைய முயற்சியே துணைபுரிகிறது. ஆதி கவி தம் சொல் என்ற துருவு கருவியைக் கொண்டு சூரிய வம்சம் என்கிற வைரத்தில் தொளை இட்டார். தோளாமணியைத் தொளைத்து அணியாக அமைத்தவர் ஆதிகவி. அவ்வாறு தொளையிடப் பட்ட மணியில் என் நூல் எளிதாகச் செல்கிறது.

தோளாத மணியைப் பயன்படுத்த முடியாது; அம் மணியைச் சாணை பிடித்துத் தொளையிட்டு அணிகலன்களில் அமைத்துக்கொள்ள இயலும். *ர. 1:4*

பெரிய கப்பல்கள் கடலை ஒட்டிய ஆறுகளிலோ, கழி களிலோ கட்டப்படுகின்றன. கப்பலைக் கட்டி முடித்தபின், அதை ஆற்றிலோ, கழியிலோ இறக்கி விடுவார்கள்; அது ஆற்றி லும் கழியிலும் ஓடிப் பழகியே கடலைச் சேரவேண்டும்.

மொழியைக் கற்பவன் முதலில் கற்பது எழுத்து. ஒலி வடிவத்திலும், வரி வடிவத்திலும் எழுத்தைக் கற்றபின்பே சொல், பொருள், யாப்பு, முதலானவற்றைக் கற்க வேண்டும். இரகு எழுத்து என்னும் கழியைக் கடந்தே மொழி என்னும் கடலில் நுழைந்தான். *கு. 3:28*

சொல் எழுத்துத் தொகுதி; பொருளோடு இணைந்தாலே சொல் பயன் பெறும். சொல் உடல்; பொருள் உயிர். சொல் உருவம் உடையது; சொல்லோடு இணைந்தே பொருள் அறியப்படுவது. பொருளோடு புணர்ந்த சொல்லே வல்லமை உள்ளது. அச்சேர்க்கையே அறிவைத் தோற்றுவிக்கும்; வளர்க் கும்; செயலுக்குரிய இயக்கம் தரும்.

உமை சொல்; சிவன் பொருள், அவர்களுடைய கூடலே 'யோகம்'; அது உலகுக்குப் பயன் தரும். அக் கூடலைக் கண்டு உமையின் தந்தை இமவான் மனநிறைவு பெற்றான்.

உமையும் சிவனும் இமயச் சாரலில் காமப் புதுமணவின் தேறலை மாந்தினர். மலைச்சிகரங்களின் அழகு பின்னணி செய்தது. அவ்வப்போது அவர்கள் இமய நகரம் வந்தனர். இமவானுடைய மனைவி, மேனா, தன் மகளுடைய நலம் மரு மகனால் துய்க்கப்படுவதைக்கண்டு மகிழ்ந்தாள்; சற்று நாணம், கோட்டிய கடைக்கண் நோக்கு, உதடுகளிலும் கழுத்திலும் பற்குறி, நகக்குறிகள் ஆகிய இவற்றைக் கண்டாள். மகளுடைய இளமையும் எழிலும் காதலனுடன் துய்ப்பிலேயன்றி வேறு எங்கு பொலிந்து விளங்கும்? தன் மகளுடைய நலம் நன்கு துய்க்கப்பட்டாலன்றி தாய் மனநிறைவு பெறுவது எங்ஙனம்?

கு. 6:79 ; 8:12

4. காதல்

வெப்பத்தால் வாடிய அரசனையும் ஒளி காலும் மாளவி காவையும் மூத்த இராணி திருமணத்தில் இணைக்கிறாள்.

உள்ளத்தின் நிலைக்களன் உடல்; உடலைவிட்டு உள்ளம் நீங்க இயலாதது. உடலின் வேகத்தைக் காட்டிலும் உள்ளத்தின் வேகம் மிகுதியாயினும் உள்ளம் உடலுடனே இருக்கும். துஷ் யந்தனுடைய உடல் ஒரு திசையில் ஏகுகிறது. அவன் உள்ளமோ அவ் உடலின் வேகத்தோடு காதலி செல்லும் வேகத்தையும் கூட்டி எதிர்த் திசையில் பாய்கிறது.

காதல் தளிர்ந்தது எப்போது? என் கண்களுக்கு அவள் இலக்கானபோது; கண்வழியாக அவளுடைய உருவம் என் மனத்தில் பதிந்தபோது.

காதல் அரும்பு தோன்றியது எப்போது? அவள் கை பற்றியது என் மெய் சிலிர்த்தபோது.

இக் காதல் மரத்தின் பழச்சுவையை என்று நான் நுகர்ந்து விடாய் தீர்வேன்? *மா. 4:1*

மனத்தில் உள்ள பெண்ணை அடைந்து இன்புறும் வேட்கைக்குத் தடைகள் பல; அவை வலியன. தடைகளின் வலிமை காதலின் இன்ப வேகத்தை நூறு மடங்கு அதிகப் படுத்துகின்றது.

இப் பெண்கள், உலகில் உள்ள ஆறுகள்; அவற்றின் பிறந்த வீடு, மலைகள்; அவற்றின் காதலன் கடல், ஒவ்வொரு ஆறும், துணை தேடாது, மலையிலிருந்து கடலை நோக்கி விரைகிறது. வழியில், சந்தனக் காடுகளையும் சோலைகளையும் தாண்டி வருகையில் அவற்றால் அணி செய்யப்பட்டு வருகிறது. அலை கள் கடலின் உதடுகள், அவற்றை ஒவ்வோர் ஆற்றுக்கும் தனித் தனியே தந்து, கடல் அதன் முத்தத்தைக் கொள்கிறது. *ர: 13:9*

கங்கை வற்றாத ஜீவநதி. அதன் நீர் எப்போதும் கடலில் பாய்ந்து கொண்டிருக்கும் அந்த நீரின் மனத்தையும் சுவையை யும் பருகிக்கொண்டே இருந்தாலும் கடலுக்குத் தெவிட்டுவ

உமையும் சிவனும் ஒத்த காமம் கொண்டவராகத் தம் வாய்ச்சுவையும் நாற்றமும் நுகர்ந்தனர். அவர்களுக்குக் காமப் புதுமணவின் தேறல் தெவிட்டவில்லை. *கு. 8:16*

ஊடல் கொண்ட காதலியை, அவளுடைய காதலன் நெடுந் தொலைவினின்று காண்கிறான். அவன் அணுகும் போது அவள் நெற்றி சுளித்து, முகம் கோட்டி, அமைகிறாள். அவள் அரை மனத்துடன் தடுத்தும் அருகில் வந்து அவளுடைய துடிக்கும் உதட்டில் அவன் முத்தம் இடுகிறான்.

விதிசபுரியின் மேல் மேகம் வடக்கு நோக்கிச் செல்கிறது. வேத்ரவதி ஆறு சுழிகளோடிச் சிற்றலைகள் கரையில் மோத, அவ்வூரினிடையே ஓடுகிறது. மேகம் கீழே இறங்கி அவ் ஆற்றில் படிந்து, நீரைப் பருகுகிறது. இயக்கனுடைய தூதைச் சொல்ல வடஇந்தியாவின் கொடிய வெப்பத்தில் மெய்வருந்த நெடுந் தூரம் வந்ததற்குப் பரிசு இது. *மே: 1:24*

சிவபெருமான் ஆசான்; உமை மாணவி, காமக்கலையே கல்வி. இரகசியத்தில் இருவரும் ஒன்றுகூடி இருந்தபோது ஆசான் மாணவிக்கு அக் கலையைப் பயிற்றினான்.

காமக்கலையை ஏதும் அறியாப் பேதையாகப் பயிலத் தொடங்கிய உமை விரைவில் அக் கலையில் நிபுணியாகி விட்டாள்.

குருதக்ஷிணை?

தன் குருவுக்குச் சமமான வல்லமை பெற்று, அக்கலையால் அவனுக்குத் தன்னையே உரிமையாக்கித் தந்த இன்பமே அவள் குருவுக்குத் தந்த ‘தக்ஷிணை’. (தக்ஷிணை என்ற சமற்கிருதச் சொல் ‘ஸாமர்த்யம், வல்லமை, முழு நிறைவு பெறுவித்தல்’ எனப்பல பொருள்களை உட்கொண்டது) குரு இதனினும் வேறு என்ன சிறந்த தக்ஷிணையைப் பெறமுடியும்? *கு. 8:17*

கரிய மேகம் மெதுவாக ஊரில் இறங்குகிறது. உயர்ந்த மாளிகைகளை அணுகுகிறது. முன்றில் தோறும், மாடந்தோறும், நுழைகிறது. வெள்ளி வீழ் (விழு)து போல மழைத் துளிகளைச் சொரிகிறது.

காதலியின் கருங் கூந்தல் காதலனுடைய உயர்ந்த தோளிலும், பரந்த மார்பிலும், பரவுகிறது. கூந்தலில் முத்துச்சரங்கள் பின்னப்பட்டுள்ளன. அவற்றினின்று வெண் முத்துகள் சிதறுகின்றன.

மேகம் விரும்பியவாறு மனைகளில் நுழைந்து திரிகிறது.

காதலி, இன்ப மயக்கத்தில் நாணத்தைத் துறந்து, காதலனை விருப்பம் போலத் துய்க்கிறாள். *மே: 1:63*

மிதிலை நகர் அத்தகைய காதலி, நாற்புறமும் உத்தியான வனங்களை உடையவள். அவற்றில் தளிர்களும் கொடிகளும் பூக்களும் குலுங்குகின்றன. இராமனது கடிமணத்துக்குப் பெரும் சேனையுடன் தசரதன் வந்தான். சேனையில் உள்ள யானைகளும், தேர்களும், குதிரைகளும், வீரர்களும் தம் அளவு கடந்த அன்பால் உத்தியான வனங்களையும் அவற்றில் உள்ள மரம், தளிர், கொடி, மலர்களையும் இறுகத் தழுவினர். அவற்றின் இளமைப் பொலிவு குலைந்தது. ஆனால், மிதிலை நங்கை இவ் ஆலிங்கனத்தை விரும்பி வரவேற்றாள். தன் எழில் நலக் குலைவை அவள் அறியவே இல்லை. ஆலிங்கனத்தால் உண்டான இன்பத்தில் திளைத்திருந்தாள். *ர. 11:52*

புதிதாக மணமான இளம் பெண் அவள். கணவன் அகன்ற மார்பும் உடல்திண்மையும் உடையவன். இன்பச் சூழ்நிலை, இன்சொல், அன்பு, ஆர்வம், நாகரிக நடைமுறைகளால் அவன் அவள் மனத்தையும் உடலையும் கனிவாக்கி, அவளுக்குத் தன்மீது ஆசையை எழுப்பி, அவளைத்தான் அநுபவிப்பது போலவே அவளும் தன்னை அநுபவிக்கச் செய்து, ஒத்த இன்பம் நுகர்வது முறையன்றோ? அன்றேல், இல்வாழ்க்கை வெறுப்பிலும் அருவருப்பிலும் முடியலாம். இதை உணர்ந்தவன் அஜன்.

சா. 8:17

சகுந்தலை அரசவைக்கு ஆர்வத்துடன் வந்து, தான் துஷ்யந்தனுடைய மனைவி என்று அறிவித்தும், துஷ்யந்தன் அவளை ஏற்க மறுக்கிறான். அவள் கருவுற்றுள்ளதை அறிந்தும், அவள்மீது இரக்கம் கொள்ளவில்லை. பல ஆண்டுகளுக்குப்பின் உண்மையை அறிந்த அரசன் தன் கொடுஞ் செயலுக்குக் கழி

விரக்கம் கொண்டு, சகுந்தலையின் ஓவியத்தை வரைந்து, அதைக் கண்டு பிதற்றுகிறான், ஆற்றை அணுகியும் விடாய் தீர்க்காமல் கானல் நீரைத் தேடும் பித்தனே போல்வான் அவன். *சா. 6:16*

5. குழந்தை

மங்களகரமான தீபம் அதன் சுடரால் விளங்குகிறது; விண் வெளி ஆகாய கங்கை எனப்படும் வெண்மையான உடுத் திரளால் தூய்மை பெறுகிறது; கல்விமான் நன்கு பயின்ற இலக் கண மரபுக்கு ஏற்ற சொல் அமைப்பால் பொலிகிறான். சொற் களுக்குத் தூய்மை மேதகு செயல்களைக் கூறுவதால் உண்டாகும்.

முன்பே உயர்ந்தவன், ஒளிமிக்கவன், தூயவன் ஆக இருந்த இமவானை மேலும் விளங்கச் செய்தாள் உமை. *கு. 1:28*

குழந்தையின் அறிவு வளர்ச்சிக்குப் புறச்சூழ்நிலையும் அக நிலையும் வேண்டியுள்ளன.

புறச்சூழ்நிலை குழந்தைக்குக் கிடைப்பது அன்னப் பறவை கள் தாமாகவே கங்கையாற்றை வேனிற் காலத்தில் வந்து அடை வது போன்றது. அன்னம் பகுத்து அறிந்து சாரத்தை மட்டும் பருகவல்லது. வேனிற் காலத்தில் நீரும் வானும் தெளிவுற்றிருக் கும். அவ்வாறு பகுத்தறியும் ஆற்றலும், தெளிவும்,உரிய காலத் தில் வெளியே இருந்து உமையைச் சார்ந்தன.

அவ்டதவாதிகளுக்கு இயற்கையாக உள்ள ஒளி இரவில் வெளிப்படும். அவ் ஒளியை யாராலும் மறைக்க முடியாது. அவ்வாறு அகநிலையில் இருந்த புத்திகூர்மை உமை கல்வி தொடங்கும் காலத்தில் ஒளி கான்றது. *கு. 1:30*

அழகுத்தெய்வம் நிலவைப் பெற்றது; தாமரையையும் பெற்றது; இரண்டுமே அழகியவைதாம். எனினும், நிலவின் ஒளி யில் தாமரையின் மலர்ச்சியை நுகர இயலவில்லையே என அத் தெய்வத்துக்கு ஒரு குறை இருந்தது. உமை தோன்றினாள் அவளு டைய முகத்தில் நிலவி ஒளியையும் தாமரையின் அழகையும் ஒருங்கே கண்டு அத் தெய்வம் தன் குறை நீர்ந்தாள் *கு. 1:43*

பருதியின் கதிர் பரவுவதால் தாமரை மொட்டு மலர்ந்து விரிகிறது. உமை மங்கைப்பருவம் அடைகிறாள். இதுவரை சதைப் பற்று இன்றி, முயன்று அழகு செய்யவேண்டியதாக இருந்த அவள் உடலின் ஒடுக்கங்கள் மறைந்தன. தசை நிரம்பி, மார்பும் பிட்டமும் சம பாகங்களாகப் பிரிந்து, மெலிந்த இடையும் தோன்றியது. ஓவியனுடைய தூரிகையால் ஓவியம் முழுமைபெறுவதுபோல, மங்கைப் பருவத்தால் உமை அழகின் முழுமை பெற்றாள். புத்திளமையின் கிரணங்களால் அவள் அவயவங்களில் அழகு பொழிந்தது. *கு. 1:32*

உமை தவக்கோலம் பூண்டிருந்தாள்; முன்பு அவள் கூந்தலிலும், காதிலும், கழுத்திலும் அணிந்திருந்த அணிகளால் அவள் முகத்தாமரை பொலிவுற்றிருந்தது. இப்போது சடையாகிய குழலோடு மரவுரி உடுத்துத் தோன்றினாலும், உமையின் முகத்தாமரை சேற்றில் பாசி சூழ்ந்ததாக இருந்தாலும், அதன் அழகு குறையவே இல்லை. *கு. 5:9*

திலீபன் குழந்தையின் முகத்தழகைத் தன் கண்களால் பருகினான். அவன் கண்கள் காற்று வீசாத காலத்துப் பொய்கையில் பூத்த தாமரை மலர்களைப்போல விரிந்தன. தன் இன்பத்தைத் தன் குடிமக்களுடன் சேர்ந்து நுகர்ந்தான். கடல் முழுமதியைக் கண்டதும் தன் திரைக்கைகளை எடுத்து ஆட்டித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுவதுபோல மக்களுக்குத் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்து அவர்களுடன் களிப்பில் திளைத்தான். *ர. 3:17*

சகுந்தலை தன் பேரெழிலின் சிறப்பை அறியாத பேதைப் பெண். அவள் துஷ்யந்தனைக் காதலித்தாள். அவன் அரசன் என்பதை அறிந்தபின், அவன் தன்னை ஏற்பானோ, ஏற்க மாட்டானோ, என்ற அச்சம் அவள் மனத்தை வாட்டியது. அவ் அச்சத்தை அவள் தன் தோழிகளிடம் கூறும் போது துஷ்யந்தனே மறைந்திருந்து கேட்கிறான்.

"திருவை பெறுவதற்காகப் பலர் தவம் கிடக்கிறார்கள். அவர்களுக்கு திரு அருள் புரியட்டும், புரியாமல் இருக்கட்டும்; ஆனால், திருமகளே ஒருவனை விரும்பினால், அவள் அவனை அடைவதற்கு என்ன தடை இருக்க முடியும்?"

இது துஷ்யந்தன் தனக்குள் கூறுவது.

"உன் எழில்வனப்பை நீ இகழ்கிறாய், தன்மை தரும் இள வேனில் கால முழு நிலவினுடைய ஒளியை முன்தானையால் யாரால் மறைக்க முடியும்?" *சா. 3:13*

அனிச்ச மலர் மெல்லிது. எனினும், அதில் உள்ள தேனை நுகர வரும் வண்டைத் தாங்க வல்லது; ஆனால் பறவைகளின் பாதங்களைத் தாங்க வல்லதன்று.

மகளிர் உடலும் அத்தகையதே. காதலனைத் தழுவி ஏற்கவல்லது;ஆனால் ஊன் வாடத் தவம் செய்யும் வெம்மை யைத் தாங்க இயலாதது. *கு. 5:4*

மலைகளில் ஆறு தன் போக்கில் ஓடுகிறது; மலை குறுக்கிடுகிறது. என் செய்வது என ஒரு கணம் ஆறு திகைக்கிறது; ஓட்டம் தடைப்படுகிறது; மலையைச் சுற்றியோ, பள்ளத்தில் வீழ்ந்து நிரப்பியோ, ஆறு தன் வழிச் செல்லும்.

உமை சிவபெருமானை வலம் வந்தோ, அடியில் விழுந்து வணங்கியோ செல்ல உரியவள். நாணத்தால் எடுத்த காலை எங்கு வைப்பது என்று அறியாமல் திகைக்கிறாள். *கு. 5:85*

ஓமத்தீயினின்று எழுந்த புகையால் புரோகிதரின் கண்கள் கலங்குகின்றன அவியைக் கையில் ஏந்தி அதை எங்கு இடுவது என அவர் திகைத்திருந்தபோது, அவி கையிலிருந்து நழுவித் தானாகவே ஓமத்தீயில் வீழ்ந்து விட்டது.

கண்வர் கண் மறைந்திருந்த நேரத்தில் சகுந்தலை உரிய வரனிடம் சேர்ந்துவிட்டாள்; நல்ல கல்வியைத் தக்க சீடனுக்கு நல்கியது போல, இச் சேர்க்கை நல்ல பயன் தரும் எனக் கண்வர் சகுந்தலையை வாழ்த்தினார். *சா. 4:3*

வடநாட்டில் வேனிற்கால இரவு குறுகியது; சூரியன் மறைந்து இருள் சிறிதே பரவியதும், மீண்டும் ஒளி பரவிக் கதிரவன் உதயமாகிவிடுகிறான்: அக்குறுகிய இரவில் விண்மீன் கூட்டங்கள் காணப்படுவதில்லை. மதியும் ஒளி இழந்து தோன்றும்.

கரு உற்ற அரசி உடல் வெளுத்து, முகப்பொலிவு இழந்து, அணிகலன்கள் அன்றித் தோற்றமளிக்கிறான் பொலிவு அற்ற

முகம் விடியற்காலையில் தோன்றும் மதி போலம், அணி கலன்களின் நீக்கம் விண்மீன் திரள் மறைவு போலும், வெளிறிய உடல் அவ் இரவு போலும், கவி கற்பனை செய்கிறார். *ர. 3:2*

கருவுற்ற பெண்ணுக்கு மண்ணைத்தின்ன மசக்கை எழுவ துண்டு. அரசிக்குப் பலவகை உணவுகள் கிடைக்குமெனினும், அவள் மண்ணை உண்ண விரும்பினாள்; ஏன்? தன் கருவில் வளரும் குழந்தை ஒரு காலத்தில் இந்த மண்ணுலகம் முழுவதும் ஆளப்போகிறான்; கருவிலேயே மண்ணுலகின் சுவையையும் அவன் அறியட்டுமே, என்பதனால். *ர. 3:4*

செல்வங்களுக்கு உறைவிடம் நிலம். உழைப்பால், நிலத்தின் செல்வங்கள் உணவுப் பொருள்களாகவும், கனிப்பொருள்களாக வும் வெளிப்படும் அவ்வாறே தீயில் வீரமும், நீரில் தூய்மையும் உள்ளன. நிலம், நீர், தீ ஆகிய மூன்றிலும் பொதிந்துள்ள ஆற்றல் களைப் பாதுகாத்து, உரிய காலத்தில் வெளிக்கொணர்ந்து குடி உயருவதற்கு இயக்க வேண்டும். இவற்றை எண்ணி, அரசன் நிலமாக, வன்னி மரமாக, சரசுவதி நதியாக அரசியைக் கற்பனை செய்தான். வளத்தையும் வீரத்தையும் தூய்மையையும் தாங்கி இருப்பவள் அரசி.

கருப்பம் உற்று இருந்தபோது உடல் வனப்பு புலப்பட வில்லை. தற்போது மெல்லிய வயிற்றை உடைய கோசலை வெண்மையான விரிப்புள்ள அகன்ற படுக்கையில் கிடக்கிறாள். அவள் அப்போதே கரு உயிர்த்த இராமன் தாமரை மலர் போல அப் பாயலில் காணப்படுகிறான். *ர. 10:69*

கல்வி கற்கத் தக்க முயற்சியும் தளரா உழைப்பும் உடல் காவலிட்டுத் தான் வாடவாட ஆற்றும் த்வமும் இன்றியமை யாதவை. அத்தகைய கல்வியே மெய் அறிவையும் புலன் அடக்கத் தையும் தரும்.

சுமித்திரை அக் கல்வி போன்றவள்; அவள் வருந்தி ஈன்ற இரட்டையர் நற்கல்வி தந்த மெய் அறிவும் புலன் அடக்கமும் ஒத்தவர்; பிறர் பணிக்கெனத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட வர். *ர. 10:71*

இந்துமதி சுயம்வரத்திற்குப் பல அரச குமாரர்கள் வந்திருந் தனர். அவர்கள் வரிசையாக வீற்றிருந்தனர். ஓர் அரசகுமாரனை நோக்கி அவள் வரும்போது, அவள் தன்னை மாலை இடப் போவதாக எண்ணி அவன் முகம் மலர்கிறான். அவள் அவனைத் தாண்டியதும், அவன் முகம் வாடிப் பொலிவு இழக்கிறது

இந்துமதியின் மேனி 'சுடர்மணி விளக்கங்கள் எழில் கெடப்பொலிகின்றது.' அரசகுமாரர் அரச வீதியில் உள்ள மாளிகைகள். விளக்கு தாண்டியதும் மாளிகையில் இருள் சூழ்ந்தது *ர. 6:67*

பசுங்கொடியில் பல வண்ண மலர்கள் பூத்திருத்தல் பகற் பொழுதில் காணத்தக்கது. வானில் விண்மீன்கள் சில இடங் களில் தனித்தும், சில இடங்களில் திரளாகவும், இரவில் ஒளி காட்டுகின்றன.

பரந்த ஆற்றுநீரில் சக்ரவாகப் புட்களும் அன்னப் பறவை களும் அமருகின்றன. அவ்வாறு, உமையின் கரும் பச்சை நிறமுள்ள திருமேனியில் பலநிற மணிகள் குயிற்றிய, பொன்னால் ஆகிய, அணிகலன்கள் மிளிர்கின்றன. பொன்னும் மணிகளும் வேறு எங்கோ தோன்றி, உமையை அணி செய்ய வந்தன. *கு. 7:21*

திருமணம் நடந்த புதிதில் கணவனோடு இன்னும் பேசிப் பழகி அறியாத இளம் பெண் ஒருத்தி. அவள் தன் கணவனது வீரச் செயலை நேரில் காணும் வாய்ப்புப் பெற்றாள் அதைப் பாராட்ட அவளுக்கு இயற்கையாக உள்ள நாணம் தடுக்கிறது.

விண்ணிலிருந்து மழைத்துளிகள் மண்ணில் விழுகின்றன. மண் முகிலைப் பாராட்டுவது எப்படி? மயில்கள் அகவுகின்றன; தோகை விரித்து ஆடுகின்றன; அவற்றால் நில கங்கை முகிலுக் குத் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறாள் இந்துமதி உள்ளூர மகிழ்ச்சி அடைந்தும், நாணம் மீதூரத் தான் கூற இயலாததைத் தன் தோழிகளின் வாயால் வெளிப்படுத்துகிறாள். *ர. 7:69*

நிலம் அரசனுக்கு இல்லாள் அரசனுக்கு வயது முதிர்ந்தது; தன் மகனுக்கு முடிசூட்டி அரசன் துறவு மேற்கொள்கிறான். அப்போது, அதே நிலம் புதிய அரசனுக்கு இல்லாள் ஆகி பழைய அரசனுக்கு மருமகள் நிலையில் உள்ளாள்.

அந் நிலையில், பழைய அரசன் நிலத்தைத் துறந்த போதும், நிலம் அவ் அரசனை, மருமகள் மாமனாரை வழிபடுவது போல, போற்றிக் காக்கிறது. அவர் உள்ள இடத்தை அலகிட்டு மெழுகி, பூவையும் பழத்தையும் உணவுப் பொருள்களையும் கொண்டு அருச்சிக்கிறாள். அவ் அருச்சனையை மட்டும் இரகு ஏற்றான். அருச்சனையைத் தன் உரிமை என அவன் கருதவில்லை; அதில் இன்பத்தைக் காணவுமில்லை. *ர. 8:14*

தலைவனைப் பிரிந்த நங்கை அயோத்தி மாநகரம் இராமன் பதினான்கு ஆண்டுகளுக்குப் பின் திரும்பியபோது அந் நகர மாந்தர் நகரை அணி செய்கின்றனர்; அகில்புகை கமழுகிறது. அப் புகை மாளிகைகளின் கூந்தலைப்போல கரு நிறத்ததாக மேலே எழுகிறது. மேடையிலே வீசுகின்ற பூங்காற்றில் அப் புகை சுருண்டு அயோத்தி நங்கையின் வகிர்ந்த, அறல் துன்னிய, குழல்போல விளங்குகிறது. *ர. 14:12*

வேனிற்காலத்தில் வெப்பத்தால் வருந்தும் ஆறு இங்கு ஒரு கரையை அடையும்; சற்று தூரத்தில் மறு கரையை அடையும். ஆற்றின் இயல்பு அது.

சூர்ப்பணகை காம வெப்பத்தால் வருந்தி, அது தணிய இராமனையும், இலக்குவனையும் மாறி மாறி அடைந்தாள். குறித்த நாயகனுடன் பொருந்தி வாழ்வது அவள் இயல்பு அன்று; தன் காம விடாயை ஆற்றிக்கொள்ள அங்கும் இங்கும் அலைகிற ஆறு அவள். *ர. 12:35*

சீதை நிறைமாதச் சூலி தண்டக வனத்தைக் காண அவள் கொண்டிருந்த ஆசையை நிறைவேற்றுவான் போல், இராமன் அவளை இலக்குவனுடன் காட்டுக்கு அனுப்பி அங்கே விட்டுவர ஆணை இட்டிருந்தான். காட்டில் தனியாக அவனிடம் இந்த ஆணையை எவ்வாறு, எச் சொற்களால் அறிவிப்பது என இலக்குவன் ஆய்ந்து முடிவு செய்திருந்தான். ஆனால், அவன் நெஞ்சில் இறங்கிய கண்ணீர் தொண்டையை அடைக்க, இராமனது ஆணையைக் கல்மாரி பொழிவது போல விரைவில் உளறிக் கொட்டிவிட்டான்.

கேட்ட சீதை அவமானம் என்னும் சூறைக்காற்றால் தடியடிப்பட்ட கொடிபோல துவண்டு தன் பிறப்பிடமான,

எதையும் தாங்கும், நிலத்தில் விழுந்தாள். அக் கொடியிலிருந்து விழும் பூக்கள்போல அவள் அணிந்திருந்த ஆபரணங்கள் உடலிலிருந்து நழுவின. *ர. 14:53, 54*

சீதையின் அழகு வனத்திற்குச் சென்றதால் வாடவில்லை. அநுசுயை அளித்த மாலை, அணிகலன்கள், ஆடை, சந்தனம், முதலியவற்றால் அவள் முன்னிலும் பொலிவுற விளங்கினாள். அரசியாக இருக்கவேண்டிய சீதையைப் போலவே காட்டில் இருந்த சீதையும் காணப்பட்டதால், மக்கள் அவளை இராமன் குணங்களில் ஈடுபட்டு அவனுடன் காட்டுக்குச் சென்ற அரசத் திருமகள் என்றே கருதினார்கள்.

ஆனால் உண்மை அது அன்று.

அரசத் திருமகள் அயோத்தியிலேயே இருந்தாள். இராமன் தன்னைப் புறக்கணித்துச் சீதையுடன் காட்டுக்குச் சென்றதற்காக கறுவிக்கொண்டு இருந்தாள். பதினான்கு ஆண்டுகள் கழிந்தன. இராமன் அயோத்திக்குத் திரும்பி சீதையுடன் பட்டாபிடேகம் செய்துகொண்டான். அரசத் திருமகளுக்கு இது பொறுக்க வில்லை. சீதை பதினான்கு ஆண்டுகள் இராமனை ஏகபோகமாக அநுபவித்ததுபோல தான் இனியேனும் இராமனை ஏக போக மாக அனுபவிக்க வேண்டுமென எண்ணி உலக அபவாதத்தைக் காரணமாகக் காட்டி, சீதையைக் காட்டுக்குத் துரத்திவிட்டான் போலும்.

இது சீதையின் வாக்கு. *ர. 14:63*

சிவபெருமான் மன்மதனை அழித்தார். மன்மதனையும் ரதியையும் இணைத்திருந்த அணையும் அழிந்தது. இரதி புலம்புகிறாள்: "உன்னை அண்டி உன்னால் நான் வாழ்ந்தேன். உனக்கு அழிவு நேர்ந்தது; அவ் அழிவால் நம் தொடர்பு நிலை மாறியது; அன்பு என்னும் அணை ஒரு கணத்தில் உடைந்தது; நிலை மாறியதால், நீ ஓட நேர்ந்தது இயற்கைதானே. நான் தனியே நிற்கிறேன்." *கு. 4:6*

"கோடைக்காலத்தில் சூரியகிரணங்கள் ஆற்றுநீரை உறிஞ்சுவதால் ஆறு வற்றிப்போகிறது. ஆனால் ஆறு அழிந்து போவதில்லை. கோடைக்குப்பின் மழை வரும்; நீர்ப்பெருக்கால்

ஆறு நிறைந்து ஓடி மக்களுக்குப் பயன்படும். இப் பிரிவெனும் துயர் நீங்க, நற்காலம் வரும். அதற்காக உன் உடலைப் பாது காக்கவேண்டும், உடலை அழித்துக்கொள்ளள முற்படாதே."

காமன் எரிந்ததும் தன்னையும் அழித்துக்கொள்ள முற் பட்ட இரதியைத் தேவர்கள் தடுத்து நிறுத்துகின்றனர். கு. 4:44

புற வெப்பம் எந்தப் பொருளையும் உறுதி குலையச் செய் கிறது; தளர்ச்சி அடைவிக்கிறது. இரும்பையும் பழுக்கக் காய்ச் சினால் அது இளகி மென்மை அடையும்.

அழியும் உடலைப் பற்றி சொல்லவா வேண்டும்? துயரத் தால் உண்டாகும் அக வெப்பம் அசையாத சிந்தையையும் அழி யாத உள்ளத்தையும் இளக்கிக் குலைத்துவிடும்.

உன் துயரத்திற்கு ஒரு காரணம், அன்பு பூண்டோரைப் பிரிந்தது. ர. 8:43

"கொழுந்தோடிப் படர்கின்ற கொடி கொள் கொம்பை நாடுகிறது. அதன் நிலைக்கு இரங்கி, ஒரு கொம்பைத் தேடித் தா; அன்றி. அதுவே கொம்பைப் பற்றிக் கொள்ளட்டும் என உன் வழியே போ. அந்தோ, அக் கொடியின் மேல் கொதிக்கும் நீரை வார்த்துவிட்டுச் செல்கிறானே! என்ன கொடுமை!"

சகுந்தலை கருவுற்றிருக்கிறாள்; தன்னை நீங்கிய காதலன் வருவான் எனக் கருதி திசைகள் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள்; உடல் சோர்வுடன், மனத்துயரமும் வாட்ட, அவள் தன்னையே மறந்துள்ள நிலைமையில் வாசலில் வந்த முனிவனை உபசரித்து 'அதிதி ஸத்காரம்' செய்யவில்லை. அவள் தன்னைப் புறக்கணித்தாள் என முனிவன் சினந்து, அவளைச் சாபம் இட்டு அகன்றான். அச் சாபத்தையும் அவள் அறிந்தவள் அல்லள். ச. 4:1

'ஒல்கி நடக்கும்,' மெதுவாகப் போகும், ஆற்றில் அயிரை மீன்கள், மணிகளைப்போல் மிளிர்ந்து விளையாடுகின்றன; பறவைகள் முத்தாரம் போல் வரிசையாக ஆற்றங்கரையில் அமர்ந்துள்ளன; நீர் சுருங்க, வெண் மணல் பரப்பும் திட்டுகளும் அகன்றும் உயர்ந்தும் காணப்படுகின்றன.

6. துறவு

'எனது' என்னும் பற்றைத் தவிர்த்தவன் வாழ்க்கை என்னும் கடலைத்தாண்டுவதுபோல அனுமன் கடலைக் கடக்கப் பாய்ந்தான். *ர. 12:60*

7. போர்

காற்றோடு கூடிய நெருப்பை அணைக்க முடியுமா? தெளிந்த வானில் உள்ள பகுதியை கண் கூசாது பார்க்க முடியுமா? மதங்கொண்ட யானையை அடக்க முடியுமா?

அவ்வாறே இரகுவுடன் சேர்ந்த திலீபனைப் பகைவரால் வெல்ல முடியவில்லை. *ர. 3:37*

வீரர் அணியும் தலைக்கவசமே 'கோய்' என்னும் கள் குடிக்கும் பாத்திரம்; அவர்களுடைய குருதியே மது; அவர்கள் எய்த அம்புகளே மதுவைக் கலக்கும் கோல்; வெட்டி வீழ்த்தப் பட்ட தலைகளே மதுவுள் மிதக்கும் பழங்கள்.

போர்க்களம் காலதேவனின் கள்ளுக்கடையாகத் தோன்று கிறது. *ர. 7:49*

புகை உள்ள இடத்தில் தீ உண்டு. ஆனால், புகை காற்று அடிக்கும் திசையில் போகும்; தீ ஒரே இடத்தில் இருந்து காற்றின் உதவியால் அருகில் உள்ளனவற்றை எரிக்கும்.

போர் மூண்டது. அஜனின் படைகள் முன்னேறின; பகைவர் பலம் உள்ள இடங்களில் அவை பின்வாங்கின. ஆனால், பகைவருக்கு நெருப்பு என்ன நின்ற அஜனோ, ஒரே இடத்தில் நின்று, அருகில் வந்த பகைவரை அழித்துக்கொண்டே இருந்தான்.

யமன் அரக்கர் குழுவுள் நுழைய அஞ்சி நின்றான்; தன் கடமையைச் செய்யத் தவறினான். இராமனுடைய அம்பு தாடகையின் உரம் உருவித் தொளை செய்தது. அத் தொளை யினூடே யமனும் நுழைந்து அவள் உயிரைக் கொண்டான்.

இனி, அரக்கர் குலத்தோருடைய உயிரைக் கொல்லும் துணிவை யும் பெற்றான். ர. 11:18

உண்மையை அறியத் தருக்க முறை இன்றியமையாதது. பல முரண் கருத்துகள் உதிக்கின்றன. அவற்றுள் பெரும்பாலானவை கருத்தின் அகத்துள் பொதிந்துள்ள முரண்பாட்டால் தகர்ந்து போகும்; சிலவே தெளிவுள்ளன, வலியுள்ளனவாக, நிற்கும். அத்தகைய கருத்தை எடுத்துரைப்போர் தம் நிலை, அதற்கு எதிர்நிலை, குறிக்கோளை அடையும் வழி ஆகிய யாவற்றையும் தொகுத்து உரைப்பர். எதிர்க்கருத்தை வலியுறுத்துவோர் தம் நிலை, முற்கூறினோர் நிலை, தம் குறிக்கோளின் சிறப்பு, தம் நெறி ஆகிய யாவற்றையும் தொகுத்துக் கூறுவர். இருவரும் உண்மை காண விழைபவரே. இவ்விரு தொகுப்புகளிலிருந்தும் ஏற்க வேண்டியதை ஏற்று, நீக்கவேண்டியதை நீக்கினால், புதிதாக இணைப்புக் கருத்துத் தோன்றும்.

இராம - இராவண யுத்தம் அத்தகையது. இருவரும் இவ்வாத முறையைக் கையாண்டனர். ஒருவருடைய படைகளை மற்றவர் வென்றார். வஞ்சனைப்போரில் இறங்கவில்லை. ஒரு படை அழிந்தால் வேறு உயர்ந்த படைகளைக்கொண்டு சாடினர். இருவரும் காலத்தை வீணாக்கவில்லை; பயனில செய்யவில்லை; எண்ணாது துணியவுமில்லை. தம் பகைமைக்கு விரைவில் முடிவு காண்பதிலேயே ஊக்கம் செலுத்தினர். ர. 12:92

உடலுக்கு ஒவ்வாததொன்று புகுந்து விட்டது; அதை அகற்ற உடலின் மற்ற உறுப்புகளினின்று வெண் குருதிக் கணங்கள் படையெடுக்கின்றன. அவற்றால் அகற்ற முடியா விட்டால், சீழ் உண்டாகிப் புரை ஓடி, நாளடைவில் உடல் முழுவதும் அழிகிறது.

சீதையின் துன்பத்திற்கு மூளை இராவணன் நெஞ்சில் இருந்தது. இராமனுடைய அம்பு என்னும் மருந்து இராவண னுடைய உடலில் புகுந்து, அவனுடைய நெஞ்சிலிருந்த தகாத ஆசை என்னும் அம்முனையை வெளியேற்றியது. கு. 13:36

குமாரன் அமரர் பதியில் புகுந்த போது அவன் அங்குக் காண்பன: மக்களுடைய கீழ் நோக்கிய கண்களும், ஒளி அற்ற பார்வையும் அழிந்த வனங்களும், கொம்பு ஒடிந்த யானைகளும்,

புண் உற்ற குதிரைகளும், அச்சு முறிந்து தேர்களுமே. அமரர் நெஞ்சு தாரகனை எண்ணும் போதல்லாம் அஞ்சித் துணுக்குறு தலைக் குமாரனால் சகிக்க முடியவில்லை. தேவர் நகரம் இன்னும் அழகுடையதே; அதைக் காக்கும் திறனைத் தேவர் இழந்து விட்டனர்.

பருவ மங்கை ஒருத்தி அழகானவள். ஆனால், பேடிக்கு வாழ்க்கைப் பட்டு விட்டாள். அவன் அவளுடைய அழகைப் பாராட்டி, காத்து, நுகரும் திறன் இழந்து விட்டான்.

அவளுடைய கதியை அடைந்துள்ளது அமராபதி; குமாரனுக்கு இரக்கம் மிகுந்தது. கு. 13:36

8. விலங்கு, ஊர்வன, பறப்பன

நிலத் தாய் நமக்கு உணவு தந்து வளர்ப்பவள்; எல்லையற்ற கருணையும் பொறுமையும் உடையவள்; அவள் அகம் குளிர, மேனி குளிர, மழையும் பெய்தது. மழைநீர் புற்றுக்களில் புகுந்து அங்கிருந்த பாம்புகளை வெளியேற்றி விட்டது. அவை சீறி வருகின்றன. பாம்பின் சீற்றத்துக்கு நிலமா காரணம்?

கைகேயி இயற்கையாகத் தூயவள்; அருளுள்ளம் கொண்டவள்; இராமன் வளர்ந்தது அவள் கையில்; தசரதன் அன்பு மழை பொழிந்தனன் அவள் மேல். ஆனால், கைகேயியிடமிருந்தே இரு நச்சுப்பாம்புகள் புறப்பட்டன; அவை கொடியன; அவை தசரதனைக் கடித்தன. அவற்றின் நஞ்சு அவன் மாயக் காரணம் ஆனது அச் செயலுக்குக் கைகேயியா காரணம்? ர. 12:5

'கந்த' யானை கூட்டத்திற்குத் தலைமை பூணுகிறது அவ் யானைக்கன்று, 'களபம்', இளம் பருவத்தது எனினும்; மற்ற யானைகளை அடக்கும் திறன் பெற்றது. அத்திறன் அதன் இயற்கை மணத்தால் உண்டாவது.

பாம்புக்குட்டி இளையதாயினும் அதன் நஞ்சு விரைவும் கொடுமையும் உடையது.

அரசன் சிறுவனாயினும் உலகிற்குத் தலைமை பூண்டு மக்களை உயர்விக்கும் திறனையும், அவர்களைப் பகைவரிட

மிருந்து காக்கும் திறனையும் இயற்கையாகப் பிறவியிலேயே பெறுகிறான்; வயதால் அன்று. **வி. 5:18**

குரங்குப் படைகள், இராமனுடன் இலங்கையிலிருந்து அயோத்திக்கு வந்தன. இராமன் அவற்றிற்கு நகரமாந்தர்க்கு உரிய ஆடை, அணிகளைத் தந்து அலங்காரம் செய்வித்தான். முடிசூட்டும் ஊர்வலத்தில் குரங்குகள் யானைகளின் மேல் நகரத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டன.

குரங்குகள் யானை ஏறி அறியா; எனினும், மலைகளில் ஏறிப் பழகியன. ஆகையால் தாம் மலைகளின் மேல் செல்வதாக எண்ணி மகிழ்ச்சி அடைந்தன. ஏன்? யானைகளின் உயரமும் பருமனும் மலைகளை ஒத்தன; அவை பொழியும் மதநீர் மலை வீழ் அருவிகளை ஒத்தது.

குரங்குகள் தம் இயற்கைச் சூழ்நிலையில் இருப்பனவாக எண்ணின. **ர. 13:74**

பாம்பை ஒருவன் மிதித்து விடுகிறான்; உடனே பாம்பு அவனைக் கடிக்கிறது. ஏன்? அவன் குருதியைக் குடித்துத் தன் பசியையோ தாகத்தையோ தீர்த்துக்கொள்ளுவதற்காக அன்று; அவனால் பட்ட தாக்கத்தைப் பொறுக்காது தன் பழியைத் தீர்த்துக் கொள்வதற்காகவே.

இராவணன் சீதையை வஞ்சனையால் கவர்ந்தான்; அது இராமன் வில்லின் ஆற்றற்கு மாசு இதை இராமன் தான் பட்ட அவமானமாகவே கருதினான். தனக்கு உண்டான பழியை மீட்கும் பொருட்டுப் படைகளைக் கூட்டி, கடலைத் தூர்த்து, இராவணனைக் குலத்தோடும் களைந்தானே அன்றி, சீதையை மீட்டு அவளுடன் மறுவாழ்வு தொடங்க வேண்டும் என்பதற் காக அன்று. இராவண அழிப்பே இராமனுடைய குறிக்கோள்.

முதலை நீரில் காந்து உறையும்; கரையில் கல்லோடு கல்லாகப் படுத்திருக்கும்; தன்னைக் காட்டிக் கொள்ளாது; முதலை உள்ள நீர்நிலை தெளிந்திருக்கும்.

அஜனுக்குத் தீங்கு இழைக்கக் கருதிய அரசர் அவனிடம் வலிய வந்து திருமணப் பரிசுகள் தந்தனர்; மகிழ்ச்சிக்குறி காட்டித் தம் கருத்தை மறைத்தனர்; தெளிந்த மடுவில் முதலை களைப்போல மறைந்திருந்தனர் **ர. 7:30**

நெற்றிக்கண்ணைத் திறந்த சிவபெருமானால் உமையின் கண் எதிரே சாம்பலாகி வீழ்ந்தான் மன்மதன். பயத்தால் நடுங்கிய உமை கண்களை மூடி மயங்கிக் கிடந்தாள். உமையின் தந்தை யாகிய இமவான் மயங்கிக் கிடந்த மகளைத் தூக்கித் தன் தோளில் போட்டுக்கொண்டு, மலைச் சிகரங்களுக்கு இடையில் தன் இருப்பிடம் நோக்கி நடந்தான். அந்தக் காட்சி விண்ணில் உள்ள யானை ஒன்று கீழே இழிந்து, தாமரை மலரை நாளத் துடன் தன் கொம்பிடை ஏந்தி, நீண்ட உடலோடு, நெட்டடி களை எட்ட வைத்து, தன் வழியே செல்வது போல இருந்தது.

கு. 73:9

காட்டில் ஒரு மரம்; அருகில் இருந்த கொடி மரத்தில் படர்ந்தது. நாளடைவில் கொடியும் மரப்படையில் வேரூன்றி மரத்தைச் சூழ்ந்தே வளர்ந்தது.

ஒரு நாள் பெரிய யானை ஒன்று காட்டு மரங்களை விளையாட்டாக ஒடித்துத் தள்ளியது. அம் மரத்தையும் வீழ்த்தி யது. அம் மரத்தை அண்டி இருந்த கொடிகளின் கதி என்ன?

ரதி சிவனிடம் கேட்கிறாள்: "காமனை நீ அழித்தது பாதி அழிவே; அவனை அன்றிக் கதி வேறில்லாத என்னையும் அழித் தாலன்றோ அழிவு முடிவுறும்?" *கு. 4:31*

*

சுருக்க - விளக்கம்

கு - குமார சம்பவம்
சா - சாகுந்தலம்
மா - மாளவியாக்கியும்
மே - மேகதூதம்
ர - ரகுவம்சம்
வி - விக்ரம ஊர்வசியம்

அநுராகம் வெளியீடுகள்

ஜோதிடம்

கைரேகை பலன்கள்	7.00
கிரக மேடுகளும் பலன்களும்	7.00
உங்கள் யோகம் பாரப்பது எப்படி?	7 00
ஜாதகப்படி குடும்ப பலன்கள்	7.00
பெண்களின் ஜாதக யோகங்கள்	7 00
ஆருடப் பலன்கள்	7.00
பிறந்த நட்சத்திரப் பலன்கள்	7.00
ஜாதகப்படி செல்வ யோக பலன்	7.00
நன்மை தரும் நவக்கிரக ஸ்தலங்கள்	7.00
கனவுகளின் பலன்கள்	7.00
மனையடி சாஸ்திரம்	7.00
யோகமளிக்கும் காலமும், நேரமும் எது?	7.00
நாக தோஷமும் பரிகாரமும்	7.00
யோகம் தரும் நவரத்தினங்கள்	7 00
தர்மகர்மாதிபதி யோகம்	7.00
மேஷ லக்னமும் யோகப் பலன்களும்	7.00
(இதுபோனற 12 லக்னஙகளுக்கும ஒவ்வொனறும விலை ரூ.7.00)	
ஜாதகப்படி யாா எந்தத தொழில் செய்யலாம்?	7.00
ஜாதகப்படி மனைவி யோகம்	7.00
ஜாதகப்படி ஆரோக்கிய நிலை	7.00
ஜாதகப்படி குழந்தை பாக்கியம்	7.00
கோட்சாரமும் பலா பலன்களும்	7.00
ஜாதகப்படி ஆயுள் பாவம்	7.00
ருது ஜாதகப் பலன்	7.00
யோகம் தரும் சனி பகவான்	7.00
(குரு, புதன், செவ்வாய, சந்திரன், சூரியன, சுக்கிரன் ஒவவொன்றும் விலை ரூ.7.00)	
அங்க சாமுததிரிகா லட்சணம்-ஆண்கள்	7.00
அங்க சாமுத்திரிகா லட்சணம்-பெண்கள்	7.00
திருமணப் பொருத்த அட்டவணை (ஒரு நொடியில பொருததம பாாககலாம்)	7.00